உ.வே. சாமிநாதையர் நூல் ... சென்னை-20.

திருச்சிற்றம்பலம்

# நடராஜப்பத்து

பஞ்சாட்சரப்பதிகம், கண்டசுத்தி

இவை மூன்றும் அடங்கியுள்ளன




**ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்)**

**65**, திருப்பள்ளி தெரு, மதராஸ்-**1**

விலை] 1952 [0-1-0

திருச்சிற்றம்பலம்.

# நடராஜப்பத்து

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம்நீ மறை நான்கின் அடிமுடியும்நீ, மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ அனலும்நீ மண்டலமிரண்டேழும்நீ, பெண்ணும்நீ ஆணும்நீ பல்லுயிற் குயிரும்நீ பிறவும்நீ யொருவ நீயே, பேதாதி பேதம்நீ பாதாதி கேசம்நீ பெற்றதாய் தந்தைநீயே, பொன்னும்நீ பொருளும்நீ யிருளும்நீ ஒளியும்நீ போதிக்க வந்த குருநீ, புகழொணா கிரகங்க ளொன்பதும்நீ யிந்த புவனங்கள் பெற்றவனும்நீ எண்ணரிய ஜீவகோ டிகளீன்ற வப்பனே என்குறைக ளார்க்குரைப்பேன், யீசனே சிவகாமி நேசனே யெனை யீன்ற தில்லைவாழ் நடராஜனே. 1.

மானாட மழுவாட மதியாட புனலாட மங்கைசிவ காமியாட, மாலாட நூலாட மறையாட திரையாட மறைதந்த பிரம்மனாட, கோனாட வானுலகு கூட்ட மெல்லாமாட குஞ்சர முகத்தனாட, குண்டல மிரண் டாட தண்டைபுலி வுடையாட குழந்தைமுரு கேச னாட, ஞானசம் பந்தரொடு யிந்திராதி பதினெட்டு முனியட்ட பாலகருமாட, நரைதும்பை யறுகாட நந்திவா கனமாட நாட்டியப் பெண்களாட, வினையோட உனைபாட யெனைநாடி யிதுவேளை விருதோடி ஆடிவரு வாய், யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லை வாழ் நடராஜனே. 2

கடலென்ற புவிமீதில் அலையென்ற வுருகொண்டு கனவென்ற வாழ்வைநம்பி, காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே கட்டுண்டு நித்தநித்தம், உடலென்ற கும்பிக்கு உனவென்ற யிரைதேடி ஓயாம லிரவுபகலும் உண்டுண்டுறங்குவதை கண்டதே யல்லாது ஒருபய னடைந்திலேனை, தடமென்ற மிடிகரையில் பந்தபா சங்களெனும் தாபரம் பின்னலிட்டு, தாயென்று சேயென்று நீயென்று நானென்று தமியேனை யிவ் வண்ணமாய், இடையென்று கடைநின்று யேனெனறு கேளா திருப்பதுன் னழகாகுமோ, யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 3

பம்புகூனியமல்ல வைப்பல்ல மாரணந் தம்பனம் வசியமல்ல, பாதாள வஞ்சனம் பரகாய பிரவேச மது வல்ல சாலமல்ல, அம்புகுண்டுகள்விலக பொழியுமந் திரமல்ல ஆகாய குளிகையல்ல, அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல அறியமோ கனமுமல்ல, கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி கொங்கணர் புலிப் பாணியும், கோரக்கர் வள்ளுவர் போகமுனி யிவரெ லாங் கூறிடும் வைத்தியமல்ல, எம்மனதுன் னடிவிட்டு நீங்கர்து நிலைநிற்க யேதுளவு புகலவருவாய், யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நட ராஜனே. 4

நொந்துவந் தேனென்று ஆயிரஞ் சொல்லியும் செவியென்ன மந்தமுண்டோ, நுட்பநெறி யறியாத பிள்ளையைப் பெற்றபின் நோக்காத தந்தையுண்டோ, சந்ததமுந் தஞ்சமென் றடியைப் பிடித்தபின் தளராத நெஞ்சமுண்டோ, தந்திமுகன றுமுகன் யிருபிள்ளை யில்லையோ தந்தைநீ மலடுதானே, விந்தையும் ஜால மும் உன்னிடமிருக்குதே வினையொன்று மறிகிலேனே, வேதமும் சாஸ்திரமும் உன்னையே புகழுதே வேடிக்கை யிதுவல்லவோ, யிந்தவுல கீரேழு மேனளித் தாய் சொல்லு யினியுன்னை விடுவதில்லை, யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 5

வழிகண்டு உன்னடியை துதியாத போதிலும் வாஞ்சையில்லாத போதும், வாலாய மாய்க்கோயில் சுற்றாத போதிலும் வஞ்சமே செய்தபோதும், மொழி யெகனை மொகனை யில்லாமலே பாடினும் மூர்க்கனே முகடாகினும், மோசமே செய்யினும் தேசமே தவறி னும் முழுகாமியே யாகினும், பழியெனக் கல்லவே தாய்தந்தைக் கல்லவோ பார்த்தவர்கள் சொல்லார் களோ, பாரறிய மனைவிக்கு பாதியுட லீந்தநீ பாலனைக் கார்க்கொணாதோ, யெழில்பெரிய அண்டங்க ளடுக்கா யமைத்துநீ யென்குறைகள் தீர்த்தல் பெரிதோ, யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 6

அன்னை தந்தைகளென்னை யீன்றதற் கழுவனோ அறிவிலாததற் கழுவனோ, அல்லாமல் நான்முகன் தன்னையே நோவனோ ஆசைமூன் றுக்கழுவனோ, முன்பிறப் பென்ன வினைவந்து மூளுமென் றழுவனோ முத்திவரு மென்றுணர்வனோ, தன்னைநொந் தழுவனோ உன்னை நொந்தழுவனோ தவமென்ன வென்றழுவனோ, தையலர்க் கழுவனோ மெய்வளாக் கழுவனோ தரித்திர திசைக்கழுவனோ, இன்னமென்னப்பிறவி வருமோ வென் றழுவனோ யெல்லா முரைக்க வருவாய், யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 7

காயாமுன் மரமீது பூபிஞ் சறுத்தனோ கன்னியர்கள் பழிகொண்டனோ, கடனென்று பொருள்பறித் தேவயரெறித்தனோ கிளைவழியில் முள்ளிட்டனோ, தாயாருடன் பிறவிக் கென்னவினை செய்தனோ தந்த பொரு ளிலையென்றனோ, தானென்று கர்வித்து கொலைகளவு செய்தனோ தபசிகளை யேசினேனோ, வாயார பொய்சொல்லி வீண் பொருள் பறித்தனோ வாணரைப் பழித்திட்டனோ, வடவுபோலேபிறரை சேர்க்கா தடித்தனோ வந்தபின் யென்செய்தனோ, ஈயாத லோபியென்றேபெய ரெடுத்தனோ யெல்லாம் பொருத்தருளுவாய், யீசனே சிவகாமி நேசனே யெனை யீன்ற தில்லைவாழ் நடராஜனே. 8

தாயா ரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன தன் பிறவி யுறவுகோடி, தனமலை குவித்தென்ன கனபெய ரெடுத்தென்ன தாரணியை யாண்டுமென்ன, சேயர்க ளிருந்தென்ன குருவாய் திரிந்தென்ன சீஷர்களிருந்து மென்ன, சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள் செய்தென்ன நதிகளெல்லாம், ஓயாது மூழ்கினும் என்னபலன் எமனோலை ஒன்றைக் கண்டுதடுக்க, உதவுமோ யிதுவெலாம் சந்தையுற வென்றுதான் உன்னிரு பாதம்பிடித்தேன், யார்மீது உன்மன மிருந்தாலு முன் கடைக் கண்பார்வை யதுபோதுமே, யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 9

இன்னமுஞ் சொல்லவோ உன்மனங் கல்லோ இரும்போ பெரும்பாரையோ, யிருசெவியு மந்தமோ கேளாது அந்தமோ யிதுவுனக் கழகுதானோ; யென் னன்னை மோகமோ யிதுவென்ன சோபமோ யிதுவே யுன் செய்கைதானோ, உன்னைவிட் டெங்குசென் றாலும் விழ லாவனோ உனையடுத்துங் கெடுவனோ. ஓகோ விதின்குற்ற மென்குற்ற மொன்றுமில்லை யுற்றுப்பார் பெற்றவையா, என்குற்றமாயினும் உன்குற்றமாயி னும் யினியரு ளளிக்க நினைவாய், யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. 10

சனிராகு கேதுபுதன் சுக்கிரன் செவ்வாய்குருச் சந்திரன் சூரியனிவரை, சற்றெனக் குள்ளாக்கி ராசி பனி ரெண்டையும் சமமாய் நிறுத்தியுடனே, பனி யொத்த நக்ஷத் திரங்களிரு பத்தேழும் பக்குவப் படுத்திபின்னால், பகர்கின்ற கிரணங்கள் பதினொன்றை யும்வெட்டி பாரையும் அதட்டியென்முன், கனிபோல வேபேசி கெடுநினை நினைக்கின்ற கசடர்களை யுங்கசக்கி கர்த்தனின் தொண்டராம் தொண்டர்குத் தொண்ட ரின் தொண்டர்கள் தொழும்பனுக்கு, இனியவள மறுவு சிறு மணவைமுனி சாமியெனை யாள்வதினி யுன்கடன் காண், யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லை வாழ் நடராஜனே. 11

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிதம்பரம் நடராஜர்

# பஞ்சாட்சரப்பதிகம்.

வசியசிவ சங்கரா வசியகெங் காதரா வசியகை லாசவாசா, வசியபணி யணிபுரா வசியமான் மழுகரா வசியசிவகாமிநேசா, வசியதிரு நேத்திரா வசியபுவ நேஸ்வரா வசிய ஓம் நடனபாதா, வசியகரி யுரியழக வசியபுலி யிடையழக வசியசிர மாலையழகா, வசியுமதி முடியழக வசியபசு பதியழக வசியமென் மனதில் வாவா, வசியமுன் னூலழக வசியவெண் ணீரழக வசியமறை பரவுமழகா, வசியவென யுனையனினம் போற்று மடியார்க்கு அருள்மறை திறந்த தில்லை, அதிபதி ஜெனகாதி துதிபதி சிவ காமி அன்பிலுறை நடனபதியே. 1

சிவயநம வென்றுதினை மூழ்கியுரு வேற்றுவார் செய் தொழி லெலாம் வசியமாம், ஜெகவசிய மாம்சகல முகவசியமாம் செய்ய சித்துக ளெலாம்வசியமாம், வயநமசி யென்று வுரு மாட்டு வார் சத்ராதி வாளுட விட்டபந்தாம், வடங்காத பூதபே தம்பசா சினையெலாம் வளர்குலா லன்திகிரியாம், யநமசிவ வயநமசி சிவயநம யெல்லாமுன் னடலமன்றோ, யிவ்வுலக பொருளுதவி அவ்வுலக மருளுதவி யீயவிரு தெய்வமுளவோ, அவனுதி புவ னுதி கௌனுதி முத்தர்க்கு அருள்மறை திறந்ததில்லை, அதிபதீ ஜெனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடனபதியே. 2

புல்லாய்ப் பிறந்தாலு மிருகாதி ஜெனனங்கள் பசியாறி மகிழுமன்றோ, பூண்டாய்ப் பிறந்தாலும் புலத்தியர்கள் கொண்டு சில பிணிதீர்த்து புகழ்வரன்றோ, கல்லாய்ப் பிறந்தாலும் நல்ல வர்கள் மிதிகொண்டு காட்சிக் குருத்து மன்றோ, கழுதையுரு வந் தாலும் ஆவெனக் கத்தினுல் கைகண்ட சகுனமென்பார், யெல்லா மிலாமலே யிப்பிறவி தந்தெனை யேங்கவிட் டகலனின்றாய், யெத் தனை அன்னையின மெத்தனை தந்தையின மெத்தனை பிறவி வருமோ, அல்லலெனு மாசறுத் தாட்கொளுந் தெய்வமே அப் பனே தில்லை நகர்வாழ், அதிபதீ ஜெனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடனபதியே. 3

கல்லாத மூடரைக் கயவரைக் காமுகரைக் கல்நெஞ்ச வஞ்ச ரிவரை, கற்றுமறி வில்லாத மோழையைக் கோழையைக் காக்க வைத் துண்டபேரை, பொல்லாத மூர்க்கரை மிருகங்கள் போன்றவரை பொய்க்கு அஞ்சாதபேரை, பூமியிற் பிறருக்கு யிடுக்கமுயல்வோர்களை பிணமொத்த பேரைபலரை, நல்லா ரெனக்கவிகள் சொல்லி யலையாமல்ளு ளுளாவ தென்றுசிவமே, நானன்றி நீயேது நீயன்றி நானேது நானு யுரைத்ததேது, அல்லி னும் பகலினும் நீயிலா தசைவேது அருள்மறை திறந்ததில்லைக், கதிபதீ ஜெனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடன பதியே. 4

ஜெகமெட்டு திசைகளுங் கிரிகள்பல தெய்வமும் செம் பொன் மணி மாடமேடை, சேயன்னை தந்தையும் நாமென்ற ஆணவஞ் செல்வமும் வல்லசித்தும், முகடேறு மெமனுக்கு முன் வந்து உதவுமோ முத்திக்கு வித்துமுளதோ, மூவாசை விட்டுகனி சறுகாதி தின்றாலும் முன்செய்த வினையகலுமோ, யிகமினிய சுகபோகம் நின்னருளலா தேதுயில்லை யிவ்வுலக மென்றால், யீசனோனுது யிருளேது வெளியேது நினைவேது கனவுமேது. அகவுறவு பற்றற்று துறவுறவு முற்றுற்ற ஆரியர்கள் பரவுதில்லை அதிபதீ ஜெனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடன பதியே. 5

# கண்டசுத்தி.

## விருத்தம்

பணந்தேடி யாரிருந்தா ருலகமீதில்
பாவிதுரி யோதிரனும் பாட்டனும்
குணமான துரோணரவர் கருணன் பூரி
சூரியதோர் தேத்தரசன் சகுனிசல்லியன்
பிணமானார் அர்ச்சுனன்கை யம்பினாலே
பெண்டீரும் பணங்காசும் பிறகேபோச்சோ
மனமான வாழ்வுபொருள் ஆடுமாடும்
மாய்கையடா பொம்மலாட்டம் மதித்துப்பாரே.

ஆலித் தெழுந்து அபிராமன்மீது அனங்கலுற்றார்
பாலிக்கும்போது யென்செய்கு வன்பஞ்ச பாணனன்பு
சீலிக்குமேபழந் தட்டுக்குமேதனித் தொண்ணூத்தாரடி
[தழும்புபட
கூலிக்கு மேவெட்டும் பெருமாணிரவி குலோத்துங்கனே. 1

காண்டத் தொனிக்கஞ்சிய மான்மழுக் கங்குலிலே
திரண்ட வெள்ளத்தின் பிணமீதுசென்றனன் சேர்ந்தவனை
அரண்ட இன்பங் கொடுமீளக் கரூபற்றி அங்கொலுசால்
குறண்ட கன்னத்தி லுதைத்தனள்காணங் குலோத்துங்கனே. 2

கடிமலர் பந்துகொண்டு கணவனுங் கெதியைக்காவந்து அவள்
இடியெனச் சோர்ந்துவீழ்ந்தாள் யெனைமுலைக் கொடியனல்லாள்
முடியது முடவன்கையால் அரசன்முன்பதாய் சுத்திக்கொண்டு
அடிபடக் கண்டதல்லஇது அம்பலத் ததிசயந்தான். [அவள்

வாறிடை பிடிங்கிமூட்டி வளரிளங் கொங்கைநல்லாள்
நீர்விழி கண்கள்போர னேரிழை யெரித்துச்சென்று அவள்
மார்கணை தன்னைப்பற்றி யற்றவ னடியும்பட்டு
ஆர்பேரைத்தழுவிக்கொண்டாள் இதுவும்அம்பலத் ததிசயந்தான்.

கம்பத்து ணட்டி கனக விளக்கெரிய
செம்பொன் அமுளியின்மேல் சேராமல்இந்த
புல்லூறல் வாறி புகைச்சல் புகைந்தனளே
கல்லுருள செம்புருள முத்துருளக் கண்டு. 5

சொன்னசொற் கேளாவேந்தன் துடியிடை மடையாள்கையில்
மன்னவன் கழுத்தறுக்க மனமது துணிந்துவிட்டாள் [இந்த
தென்னிலை வேலனாரே திருத்தணி மலையில்வாழும்
அண்ணலும்நீரும்வந்து யென்னரசனை யெழுப்பிடீரே. 6

ஜாதிமார்க் கந்தவிழ்ந்து ஊனாக ஆனின்ற தாழ்வினை தனக் கழுவனோ, தடம்பெரிய மைந்தனைத் தனியவைத்தே வேந்தன் தலைகொய்ததற்கே நானழுவனோ, ஆதிநாள் தாலிதந் தாரியன் தனைக்கொன்ற அறவனுக்கே நானழுவனோ, அக்கான கம்புகுந்து மருமன்னர் ஊர்வேசியா யானதற்கே நானழுவனோ, வேதநூல் முறையிலா மைந்தனைத் தழுவியே வெஞ்சனலுக்கு நானழு வனோ, வெள்ளம் பிறந்துமே தள்ளாடி இடையரிடம் விட்ட தற்கே நானழுவனோ, நீதியா யுலகத்தை ஒருகுடையி லாள்கின்ற நீதிமகாராஜபோஜனே, இப்பனிண்ணயமாய் விற்கவந்த விலை மோர் தனக்கழுவனோ. 7

அன்றுதான் அன்னையுந் தந்தையுங் கூடியே அனுபவிப் பதுஞ் சஞ்சலம், அங்கொரு ஜலத்துளி தரிப்பதுஞ் சஞ்சலம், தரித்துப்பின் ஆளானதுஞ் சஞ்சலம், பெண்ணையும் மண்ணையும் விரும்புவதுஞ் சஞ்சலம், பெண்டிலா திருப்பதுஞ்சஞ்சலம், பெற்றமக னில்லா திருப்பதுஞ் சஞ்சலம், பென்றபின்புஞ் சஞ் சலம், எண்ணரிய திரவியந் தேடியுஞ் சஞ்சலம், தேடா திருப் பதுஞ் சஞ்சலம். என்று தான் சஞ்சலம் ஒழிந்து யான்உன் திரு வடிக் காளாவனோ, விண்ணவர் தொழுங்கருணைப் பிரகாசனே வள்ளிதெய்வானையுடன் வாழுமயி லேறியே வரவேண்டு மென்ற னருகே. 8

தெலுங்கருடன் சென்றுதமிழ்ப் பாடினால்மாக்கு அரவம் தெலியது ஒய்பிச்சிவாடா என்பராம், நீவுசெப்பேதி சிந்தலோ ரூள்வேசி திப்பினட்டுன்னதி செப்பஒத்தே என்பராம், அலங் கொடுத் துலுக்கர்தாம் அறிவில் அக்சானைது மாரிபாஞ் சோத் தென்பராம், துலங்கும் கன்னடர் தாம் ஆங்குமத்தோதுமது தெளிதல்லவே, ஒத்துகா சாருகொட்டாரு சுன்னி கோஓ வென் பராம், நிலையான புவியாளும் இங்கிலீஷ் காரரும் டமிள்னோ கோவென்பராம், இவரெல்லாம் இத்தமிழ்க்குரியவ ராவரோ சொல்லுமென் அற்புத நடராஜனே. 9

திருச்சிற்றம்பலம்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்) 65, திருப்பள்ளி தெரு, சென்னை-1